Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No. 128/2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-1<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | ராமசாமி |
| Father's Name | : | அண்ணாவி |
| Village | : | வெள்ளியணை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 07.04.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெள்ளியணை தேவேந்திர நகர் வடக்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய மைத்துனர் ஆவார். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொந்தவேலையாக வெள்ளியணை

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

காவல் நிலையம் சென்றிருந்த போது அங்கு போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்.**

<u>அரசு தரப்பு குறுக்குவிசாரணை</u>

புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கடந்த 20.08.2023ம் தேதி மாலை 8.30 மணியளவில் சரோஜா வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளிவிட்டு என்றும் பின்பு ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த போலீசாரிடம் ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்பதாலும் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.128 /2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-2<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | சாந்தி |
| Husband Name | : | ராமசாமி |
| Village | : | வெள்ளியணை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 07.04.2026.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெள்ளியணை தேவேந்திர நகர் வடக்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய தம்பி ஆவார். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்.**

<u>அரசு தரப்பு குறுக்குவிசாரணை</u>

கடந்த 20.08.2023ம் தேதி மாலை 8.30 மணியளவில் நானும் எனது கணவரும் சரோஜா வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரி என் கணவரை தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளிவிட்டார் என்றும், பின்பு ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த போலீசாரிடம் ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு என் கணவர் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்பதாலும் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் கையொப்பம் என்னுடையது தான். **அது எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**